# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2386 - 2024 මැයි මස 22 වැනි බදාදා - 2024.05.22

*2386 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 232 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 232 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மே மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

231 - B 82572 - 353 (2023/05)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

## காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரித்துடைமை பத்திரத்தை இரத்து செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.

மேல் மாகாணத்தில் களுத்துறை, மாவட்டத்தில் வலல்லாவிட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/(மாகாணங் களுக்கு இடையில்) காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர் லியனகே உப்புல் ஜானக்க பெரேரா ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதமிகு ஜனாதிபதி அவர்களால் 1966.11.22 ஆந் திகதி வழங்கப்பட்ட இலக்கம் ஆர் 8286 கழி உடைய அளிப்பு பத்திரத்தின் உரிமையாளராகிய வலல்லாவிட எனும் இடத்தில் வதியும் வலல்லாவிட கங்கானம்கே ஆபோச் சின்ஜோ என்பவருக்கு வழங்கப்பட்டு மதுகம மாவட்ட பதிவாளர் காரியாலயத்தின் இலக்கம் எல். டி. ஓ. 4/255 இன் கீழ் 1967.10.04 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ்க்காணும் காணித்துண்டின் பின்னுரிமையாளராக சட்ட ரீதியில் யாரும் இல்லை என்பதாலும் உரிமை உள்ளோர் அதற்கு விருப்பம் தெரிவிக்காமை நியமிப்பதற்கு யாரும் இல்லாத காரணத்தினாலும் குறித்த அளிப்பு பத்திரத்தை சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத் தருகிறேன். இது தொடர்பாக எதிர்ப்புகள் இருப்பின் 2024.06.14 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறியத் தரவும்.

**அட்டவணை**

களுத்துறை நிர்வாக மாவட்டத்தின் வலல்லாவிட பிரதேச செயலாளர் பிரிவின் தெற்கு பிரிவு 789 குலவிட வடக்கு கிராம அலுவலர் பிரிவின் குலவிட என்னும் ஊரில் அமையப் பெற்றதும் நில அளவையாளரின் பொறுப்பில் மற்றும் சர்வேயர் ஆணையாளர் மூலம் குறிக்கப்பட்ட இலக்கம், ................ உடைய களப்பதிவேட்டு பத்திரத்தின் .................... மூலம் காட்டப்படும் இலக்கம் ................. உடைய துண்டு பிரிப்பு வரைபடத்தின் மூலம் காட்டப்படும் இலக்கம் இ. கி. தி. 89. உடைய ரேகை குறிப்பின் இலக்கம் 255 உடைய காணித்துண்டு எனும் அடிப்படையில் காட்டப்பட்டதும் அளவையில் 04 ஏக்கர் 02 றூட் 06 பேர்ச் விசாலத் தன்மையுடையதுமான கீழ்க்காணும் எல்லைகளை உடைய அரச காணி: கல்வலகலே

| | | |
|---|---|---|
| வடக்கில் | : | குறிப்பிடப்படவில்லை; |
| கிழக்கில் | : | குறிப்பிடப்படவில்லை; |
| தெற்கில் | : | குறிப்பிடப்படவில்லை; |
| மேற்கில் | : | குறிப்பிடப்படவில்லை. |

எல். யூ. ஜானக பெரேரா,
பிரதேச செயலாளர்,
வலல்லாவிட.

2023, ஒற்றோபர் 25.

05 - 279

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/76054
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L09/23/04.

## 21 (2) ஆம் இலக்க காணி ஒழுங்கு விதியின் கீழான அறிவித்தல்

வட மத்திய மாகாணத்தின் பொலனறுவை மாவட்டத்தின் தமன்கடுவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட இலக்கம் 189, கொட்டலீய கிராம அலுவலர்பிரிவில் குடியேற்ற உத்தியோகத்தரினால் வரையப்பட்ட சுவடு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அளவில் சுமார் 40 பேர்ச்சஸ் ஆன அரச காணித்துண்டினை வர்த்தக நடவடிக்கைகளுக்காக திரு. லாபீர் மொஹமட் ரியாஸ் என்பவர் குத்தகைக்குக் கோரியுள்ளார் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

02. கோரப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பாடசாலைக்குச் செல்லும் பக்கப் பாதை, கழிவுக் கால்வாய் மற்றும் ஒதுக்குப் பிரதேசம்;
கிழக்கு : கழிவுக் கால்வாய் மற்றும் ஒதுக்குப் பிரதேசம்;
தெற்கு : பிரதான வீதி மற்றும் ஒதுக்குப் பிரதேசம் ;
மேற்கு : பாடசாலைக்குச் செல்லும் பக்கப் பாதை மற்றும் ஒதுக்குப் பிரதேசம் .

*03.* கோரப்பட்டுள்ள காணியை தேவையான விடயத்துக்காக குத்தகைக்கு வழங்க முடியும். எனவே, அரசாங்கத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதுகின்றது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2024.05.13 ஆந் திகதி முதல் முப்பது வருடங்கள் முன்னோக்கியதாக)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவினை (ரூபா 5,000,000.00) விடக் குறைவாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் மீது அவ் வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2 ஆகும். 2024 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபா (ரூபா 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவை (ரூபா 5,000,000.00) விஞ்சும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் மீது அவ் வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக் குத்தகைத் தொகையானது ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு தடவையும் திருத்தங்களுக்கு உட்பட வேண்டுமென்பதுடன், அது கடந்த 05 ஆண்டுகளின் இறுதியில் அறவிடப்பட்டுள்ள வருடாந்த குத்தகைத் தொகையில் 20% ஐ சேர்ப்பதாக அமைதல் வேண்டும்.

**தவணைத் தொகை**.- அறவிடப்பட மாட்டாது.

(இ) இக்காணியை வர்த்தக நடவடிக்கைகளுக்காக அன்றி வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படலாகாது;

(ஈ) இக்குத்தகை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட காலப்பகுதியில் மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர் (வட மத்திய)/பிரதேச செயலாளர், கருத்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகையானது உட்படுதல் வேண்டும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/கட்டடப்பட்டுள்ள கட்டடங்களை சிறந்த அபிவிருத்தியடைந்த நிலையில் பேணிச்செல்ல வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிலையில், குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்டுள்ள நோக்கத்தை எய்துகொள்ள உரிய காலப்பகுதியில் தவறும் பட்சத்தில் குத்தகையை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2024.05.13 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் செல்லும் வரையில் காணியை கீழ்க் குத்தகைக்கு அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகை தொடர்ச்சியாக செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், குத்தகை செலுத்தத் தவறும் பட்சத்தில், ஒப்பந்தமானது தானாக செயலிழக்கும்;

(ஒ) குத்தகை தொடர்ச்சியாக செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் குத்தகைக்காக 10% தண்டப் பண வட்டி அறவிடப்படும்;

(ஓ) நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வாரங்களுக்குள் குறிப்பிட்ட காணி குத்தகைக்கு வழங்கப்படலாகாதென்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும் காரணங்கள் எழுத்து மூலம் என்னிடம் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் கோரிக்கையின் படி குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஜீ. பீ. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, மே 20.

05 - 289